# பிரதமர் பிரேசில், ரியோ டி ஜெனீரோவில் நடக்கும் 17வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்றார் (ஜூலை 06, 2025)

ஜூலை 06, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று 6-7 ஜூலை 2025 பிரேசிலின் ரியோ டி ஜெனீரோவில் நடைபெறும் 17வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்றார். உலகளாவிய ஆளுமை சீர்திருத்தம், தெற்கு உலக நாடுகளின் பிரச்சனைகளை சரிசெய்தல், அமைதி மற்றும் பாதுகாப்பு, பலதரப்பு, மேம்பாட்டு பிரச்சனைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பிரிக்ஸ் செயல்பாடுகளின் பட்டியல் பற்றிய பல்வேறு பிரச்சனைகள் குறித்து தலைவர்கள் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களை நடத்தினர். பிரதமர் பிரேசில் அதிபரிடம் அவரது சிறப்பான விருந்தோம்பல் மற்றும் உச்சிமாநாட்டின் வெற்றிகரமான அமைப்புக்காக நன்றி தெரிவித்தார்.

2. "உலகளாவிய ஆளுகை மற்றும் அமைதி மற்றும் பாதுகாப்பு சீர்திருத்தம்" என்ற தொடக்க அமர்வில் பிரதமர் உரையாற்றினார். பின்னர், "பலதரப்பு, பொருளாதார-நிதி விவகாரங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவை வலுப்படுத்துதல்" பற்றிய ஒரு அமர்விலும் பிரதமர் உரையாற்றினார். இந்த அமர்வில் பிரிக்ஸ் பங்குதாரர் மற்றும் அழைக்கப்பட்ட நாடுகள் பங்கேற்றன.

3. உலகளாவிய ஆளுகை மற்றும் அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த அமர்வில் உரையாற்றிய பிரதமர், தெற்கு உலக நாடுகளின் பிரச்சனைகளை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். காலநிலை நிதியளிப்பு மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகல் அடிப்படையில், வளரும் நாடுகளுக்கு நிலையான வளர்ச்சிக்கு அதிக ஆதரவு தேவை என்று அவர் குறிப்பிட்டார். 20 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய அமைப்புகளுக்கு 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் திறன் இல்லை

என்பதை எடுத்துக்காட்டி, அவற்றை சீர்திருத்துவதற்கான தேவையை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், IMF, உலக வங்கி, மற்றும் WTO போன்ற உலகளாவிய ஆளுமை நிறுவனங்கள் சமகால உண்மைகளை பிரதிபலிக்க அவசர சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் கூறினார். ஐ.நா. பாதுகாப்பு சபை சீர்திருத்தத்தின் அவசரத்தை எடுத்துக்காட்டுவதற்கும், உச்சிமாநாட்டு பிரகடனத்தில் பிரச்சனையை ஏற்றுக்கொள்வதற்காகவும் தலைவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

4. அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்து, பயங்கரவாதம் என்பது மனிதகுலத்திற்கான ஒரு கடுமையான அச்சுறுத்தல் என்று பிரதமர் வலியுறுத்தினார். இந்த சூழலில், ஏப்ரல் 2025-யில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் இந்தியா மீதான ஒரு தாக்குதல் மட்டுமல்ல, முழு மனிதகுலத்தின் மீதான ஒரு தாக்குதல் என்பதை அவர் குறிப்பிட்டார். பயங்கரவாதத்திற்கு எதிரான வலுவான உலகளாவிய நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்த பிரதமர், பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு சூழலை வழங்குவதற்கான நிதியளிப்பு, ஊக்குவிப்பு அல்லது ஆதரவு வழங்கும் விஷயங்களை கடுமையாக கையாளப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். பயங்கரவாதத்தை கையாள்வதில் எந்த பாரபட்சமும் பார்க்கக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலை கடுமையாக கண்டித்த பிரிக்ஸ் தலைவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை வலுப்படுத்த பிரிக்ஸ் நாடுகளுக்கு அழைப்பு விடுத்த பிரதமர், அச்சுறுத்தலை சமாளிப்பதில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

5. மேலும் விரிவாக கூறுகையில் இந்த விஷயம் மேற்கு ஆசியா முதல் ஐரோப்பா வரை ஆழமான கவலைகளை தருவதாக பிரதமர் குறிப்பிட்டார். அத்தகைய பிரச்சனைகளைத் தீர்க்க இந்தியா எப்போதும் பேச்சுவார்த்தை மற்றும் அரசாங்கங்களை அழைத்து மற்றும் அத்தகைய

முயற்சிகளுக்கு பங்களிக்க தயாராக இருக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

6. "பலதரப்பு, பொருளாதார-நிதி விவகாரங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவை வலுப்படுத்துதல்" பற்றிய அமர்வில் உரையாற்றிய பிரதமர், பன்முகத்தன்மை என்பது பிரிக்ஸ்-யின் மதிப்புமிக்க வலிமையில் ஒன்று என்று அவர் கூறினார். உலக ஒழுங்கு அழுத்தத்தின் கீழ் இருந்த நேரத்தில் மற்றும் நிச்சயமற்ற தன்மை மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் உலகளாவிய சமூகம், பிரிக்ஸ்-யின் பொருத்தம் தெளிவாக உள்ளது என்று அவர் கூறினார்.  பலதரப்பட்ட உலகை வடிவமைப்பதில் பிரிக்ஸ் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.  இந்த விஷயத்தில், அவர் நான்கு பரிந்துரைகளை வழங்கினார்: ஒன்று, பிரிக்ஸ் புதிய மேம்பாட்டு வங்கி திட்டங்களை வழங்குவதற்கான தேவை சார்ந்த கொள்கை மற்றும் நீண்ட கால நிலைத்தன்மையை பின்பற்ற வேண்டும்; இரண்டு, இந்த குழுவானது தெற்கு உலக நாடுகளுக்கு பயனளிக்கும் ஒரு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி களஞ்சியத்தை அமைப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்; மூன்று, முக்கியமான கனிமங்களின் விநியோகச் சங்கிலியை பாதுகாப்பாகவும், வசதியானதாகவும் மாற்றுவதற்கு கவனம் செலுத்த வேண்டும்; மற்றும், நான்கு, இந்த குழு AI கண்டுபிடிப்புகளுக்காக வேலை செய்ய வேண்டும் - AI நிர்வாகத்தின் கவலைகளைப் பார்க்கும்போது, துறையில் புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கும் இது சமமான முக்கியத்துவத்தை வழங்க வேண்டும் என்பதாகும்.

7. தலைவர்களின் அமர்வின் முடிவில், உறுப்பினர் நாடுகள் 'ரியோ டி ஜெனீரோ அறிவிப்பை' ஏற்றுக்கொண்டன [Link]. உலகளாவிய ஆளுகை [Link], அமைதி மற்றும் பாதுகாப்பு [Link] மற்றும் பலதரப்பு, பொருளாதார-நிதி விவகாரங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு [Link] குறித்த அமர்வுகளில் பிரதமரின் முழு உரையை இங்கே காணலாம்.

ரியோ டி ஜெனீரோ

ஜூலை 06, 2025